மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், ஓட்டப்பிடாரம்.

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII,Cr.P.C)

| | | |
|---|---|---|
| வழக்கு எண். | : | CC 20/2022 |
| பெயர் | : | பாலம்மாள் (PW 12 / LW14) |
| த/பெ. க/பெ | : | ஜோதி |
| வயது | : | 60 |
| கிராமம் | : | மணக்காடு |
| தாலுகா | : | |
| Calling | : | |

(Accused is present.)

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 11th day of August 2026

<u>முதல் விசாரணை</u>

1) நான் தற்போது மணக்காடு என்ற கிராமத்தில் வசித்து வருகின்றேன். ஆஜர் எதிரியை தெரியும். விபத்தில் இறந்துபோன பேச்சியம்மாள், கோமதி, மலையழகு, ஈஸ்வரி மற்றும் பேச்சியம்மாள் மற்றும் செல்லத்தாய் ஆகியோரை தெரியும். இந்த வழக்கின் புகார் கொடுத்த எங்கள் ஊரைச்சேர்ந்த சுப்பிரமணியன் மனைவி பேச்சியம்மாளை தெரியும். சாட்சிகள் ஆனந்தம்மாள, பொன்னுத்தாய், மாரியம்மாள் ஆகியோரை தெரியும். சம்பவ நடந்த கால கட்டத்தில் எங்கள் ஊர் மற்றும் பக்கத்து ஊரான மணப்படை வீடு கிராமத்தை சேர்ந்த பெண்கள் சுமார் 33 நபர்கள் மணியாச்சி கிராமத்திற்கு உளுந்து குலை அறுப்பதற்காக எதிரி சித்திரை தொட்டி ஆட்டோ வாகனத்தில் வருவோம்.

2) வழக்கமாக ஊரில் இருந்து காலை 07.00 மணிக்கு கிளம்புவோம். சம்பவ நடந்த தேதி மாதம் எனக்கு படிப்பறிவு இல்லாததால் நியாபகம் இல்லை, கடந்த 5 வருடங்களுக்கு முன்பு காலை 07.00 மணிக்கு நானும் விபத்தில் இறந்து போன 6 பெண்களும், காயம்அடைந்த சாட்சிகளும் எதிரியின் தொட்டி ஆட்டோவில் கிளம்பினோம். நாங்கள் அனைவரும் தொட்டி ஆட்டோவில் பின்புற பகுதியில் நான் உட்கார்ந்திருந்தேன்.

3) எங்கள் ஊரில் இருந்து மணியாச்சியை நோக்கி காலை 08.00 மணிக்கு மணியாச்சி காவல் நிலையத்திற்கு மேற்கே வந்து கொண்டிருந்த போது தொட்டி ஆட்டோ அலம்பி வந்தது. ரோட்டின் இடது ஓரம் பாலத்தின் மோதி கிடங்கிற்குள்

விழுந்து விட்டது. எனக்கு தலையிலும் வலது கை மற்றும் முதுகு ஆகிய இடங்களில் காயம் ஏற்பட்டது விபத்து நடந்த அன்று ஆஜர் எதிரி தான் வாகனத்தை ஓட்டிவந்தார். எனக்கு தொட்டி ஆட்டோவின் பதிவெண் நியாபகம் இல்லை. மேற்படி சம்பவதில் மணப்படைவீடு கிராமத்தை சேர்ந்த 6 பெண்கள் சம்பவ இடத்தில் இறந்து விட்டார்கள்.

4) எங்கள் ஊரைச்சேர்ந்த 10 பெண்களுக்கு காயம் ஏற்பட்டது. காயம் பட்ட என்னை திருநெல்வேலி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்து சென்றனர். வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தனர்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1) போலீசார் விசாரிக்கும் போது எந்த தேதி மாதத்தில் விபத்து ஏற்பட்டது எனக்கு தெரியாது என்று சொன்னே் என்றால் சரிதான்,, போலீசார் விசாரிக்கும் போது தொட்டி ஆட்டோவின் பதிவெண் தெரியாது என்று சென்னேன் என்றால் சரிதான். நான் தொட்டி ஆட்டோவில் பின்புற பகுதியில் அமர்ந்திருந்தேன், அதனால் வாகனத்தின் முன்பாக என்ன நடந்தது என்ற விபரம் எனக்கு தெரியாது. விபத்தில் நடந்த காயத்திற்கு திருநெல்வேலி நீதிமன்றத்தில் நஷ்டஈடு வழக்க தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரிதான். நான் சொன்ன நாள் நேரத்தில் சொன்ன விதத்தில் விபத்து நடைபெறவில்லை என்று சொன்னால் சரியல்ல. நஷ்ட ஈடு வழக்கில் அதிக இழப்பீடு பெற வேண்டும் என்பதற்காக மிகைப்படுத்தி சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

Sd/–Tr.A.Dharanidharan, B.Sc.,M.L.,M.A.,L.L.M.,Dip.JJJP.,PGDDF.,
மாவட்ட உரிமையியல் மற்றும்
குற்றவியல் நடுவர்,
ஓட்டப்பிடாரம்.